[1987 நவம்பர் 11

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை நகராட்சியில் ரூ. 25.00 இலட்சம் மதிப்பீடுள்ள புதிய பேருந்து நிலையத்தின் இரண்டாம் கட்டப்பணிக்காக நகர் ஊரமைப்பு இயக்குநரால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, ரூ. 10.00 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டு, நகராட்சி பொதுப்பணித் துறையிடம் பணித்தளமும், ரூ. 5.00 இலட்சமும் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. பொதுப்பணித் துறையினரால் பணி துவங்கப்படவுள்ளது.

திரு. பி. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை நகராட்சியில் கட்டப்பட்டு வருகின்ற புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்ட வேலைகள் துவங்கப்பட்டிருப்பதற்காக அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பயணிகள் தங்கும் விடுதி கட்டும் திட்டமும் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கிறதா? பட்டுக் கோட்டை வளர்ந்து வரும் பகுதி. அங்கேயிருக்கின்ற விடுதி களில் அதிகக் கட்டணம் வசூலிக்கிறார்கள். ஆகவே நகராட்சி யால் சலுகையுடன் கூடிய விடுதிகள் அமைக்கப்படுமா? அத்துடன் அங்கே வியாபார நோக்குடன் கடைகள் கட்டப்பட்டிருக்கின் றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டாவது கட்டப் பணியில் 22 கடைகளும், ஒரு சைவ உணவு விடுதியும், ஒரு அசைவ உணவு விடுதியும் கட்டப்பட்டு வருகின்றன. முதல் கட்டத்திலே நிறை வேற்றப்பட்டிருக்கிற அந்தத் திட்டத்திலே பயணிகள் தங்கும் விடுதியும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பயணிகளுக் காகத் தங்கும் விடுதிகள் அமைக்கின்ற வழிவகை இந்தத் திட்டத்திலே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளூர் சாலை மானியம் மாற்றியமைத்தல்.

36—(* வினா எண். 8638) **திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) Local Road Grants மாற்றியமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

1987 நவம்பர் 11]

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை உயர்த்த உள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) தற்போதைய விலை ஏற்றத்திற்கு ஏற்ப உள்ளூர் சாலை மானியத்தை உயர்த்த அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குச் சாலை பராமரிப்பு எல்லாம் தாழ்ந்த நிலையில் இருக்கிறது. பஸ் போக்குவரத்துகூட போதிய அளவில் இல்லை. இப்போது ஏற்பட்டிருக்கிற மழையின் காரணமாக சாலைகளுக்கு அதிக அளவில் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் சாலை போக்குவரத்து தடைபட்டிருக்கிறது. ஆகவே, கூடிய விரைவில் இந்த மாற்றத்தைப் பற்றி அறிவிக்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட சாலைகள் அத்தனையையும் பழுது பார்க்க வேண்டுமென்றால் ஆண்டுக்கு சுமார் 11½ கோடி ரூபாய் தேவைப்படும் என்ற ஒரு புதிய மதிப்பீடு தரப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்பொழுது இருக்கின்ற நிதி நிலையில் அதிகப்படியாக எந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய முடியும் என்பதுதான் இப்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளுக்கான தேர்தல் நடந்ததற்குப் பிறகு இப்போது வந்திருக்கின்ற புதிய நிர்வாகத்தில் ரோடு பராமரிப்புக்குப் பணம் இல்லையென்றால் பல பிரச்சினைகள் ஏற்படும். உதாரணமாக சின்னவேப்பம்பட்டி பேரூராட்சியில் 10 வருடத்திற்கு முன்னால் தார் ரோடு ஒன்று போடப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரை ரிப்பேர் பண்ணாததால் வண்டி, வாகனங்கள் ஓட முடியாமல் போக்குவரத்து தடைப்பட்டிருக்கிறது. இதுகுறித்து எத்தனை விண்ணப்பங்கள் அனுப்பினாலும் பணம் இல்லை என்று பதில்

தந்துகொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரி இருக்கின்ற நிலையைத் தவிர்க்க, அரசு அவசர உணர்வோடு இதில் தலையிட்டு தேவைப்படும் முக்கியமான இடங்களுக்கு உடனடியாக அதிகப்படியான பணத்தை ஒதுக்கீடு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலைகள் போடுகின்ற நிதி என்பது மாநில அரசின் நிதியிலிருந்து ஒதுக்கப்படுகிறது. ஆண்டுக்கு 10, 15 கோடி ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிய நெருக்கடி இருக்கிறது. இப்போது 3 அல்லது 5 கோடி ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. அதுவும் குறைந்த அளவிலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இப்போது விலைவாசி அதிகமாக உள்ள சூழ்நிலையில் அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறது. அதைத்தான் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். இவ்வளவு கஷ்டங்களுக்கு இடையில் சாலைகள் போடுகின்ற நேரத்திலும் சில நேரங்களில் இயற்கையின் காரணமாக போக்குவரத்துச் சாலைகள் பழுதடைகின்ற சூழ்நிலையும், சில நேரங்களில் சாலைகளை பயன்படுத்துகின்றவர்களால் பழுதடைகின்ற சூழ்நிலையும் இருப்பதால் இவற்றை எல்லாம் எண்ணிப் பார்த்துதான் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

போளூர் நகரப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தல்.

37—(*வினா எண். 9579) **திரு. ஜெ. ராஜாபாபு :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் நகரிலுள்ள பஸ் நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (அ) இல்லை (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.